IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அகநானூற்றில் இடம்பெறும் இறைநெறியும் வழிபாடும்



**பி.சீத்தாலெட்சுமி எம்.ஏ., எம். பில்., பி.எட்.,**
**உதவிப்பேராசிரியை, தமிழ் ஆய்வியல் துறை,**
**மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர்**
**மீனாட்சி பெண்கள் கல்லூரி, பூவந்தி.**

**Devotionalism and Worship in Agananooru**

*P.SEETHALAKSHMI*
Assistant Professor, Research Department of Tamil, Madurai Sivakasi Nadars Pioneer Meenakshi Women's college, Poovanthi, Sivagangai(Dt.,)

ABSTRACT:

This article is based on the concept of religious doctrines. It is a clear stream that the people of the Sangam period were rooted in this and followed the worship of the Great deity, Minor deity worship and Nature worship. It is possible to know that he is involved in God's worship even in his daily activities.

Key words: Peruntheivam, Siru theivam, Paavai Vazhipadu, Karthigai, Kotravai, Nadukal.

**முன்னுரை:**

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க எண்ணினான். அதனடிப்படையில் இயற்கை வழிபாடு தோற்றம் பெற்றது. இவ்வாறு இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்வரு நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு வித்திட்டது எனலாம். இயற்கை வழிபாடு, ஆவியுலக வழிபாடு, குலக்குறி வழிபாடு, புனிதப்போலி வழிபாடு, முன்னோர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள் பண்டை மக்களிடையே வழக்கத்தில் இருந்தன. இவ்வழக்கம் சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையில் ஒன்றான அகநானூற்றில் இடம்பெறும் தன்மை குறித்து **"அகநானூற்றில் இறைநெறி"** எனும் பொருண்மையில் இக்கட்டுரை விளக்கியமைகிறது.

**அகநானூறும் இறைவழிபாடும்:**

அகப்பொருள் பற்றிக் கூறும் அகநானூறு நானூறு பாடல்களையுடையது. இது நெடுந்தொகையெனவும் வழங்கப்படுகிறது. இதனைத் தொகுத்தவர் உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மனார் ஆவார். இந்நூல் ஐவகை மக்களின் வாழ்வியல் முறைகளை அழகுற எடுத்துரைப்பதோடு அவர்களின் இறை வழிபாடு, இறை நம்பிக்கைகள் போன்றவற்றையும் எடுத்துரைக்கிறது.[1] அவ்வகையில் அகநானூற்றில் பெருந்தெய்வங்களாகக் கருதப்படும் சிவன், திருமால், முருகன் போன்ற தெய்வங்கள் குறித்தும், சிறுதெய்வங்களான கொற்றவை வழிபாடு, கானமர் செவ்வி,

பாவை, அணங்கு போன்ற தெய்வங்களையும் இவை தவிர்த்த நடுகல் வழிபாடு, கார்த்திகை தீப வழிபாடு, மலையுறை தெய்வ வழிபாடு போன்ற வழிபாடுகளையும் அக்கால மக்கள் மேற்கொண்டுள்ள பான்மை அகநானூற்றில் விரவிக் காணப்படுகிறது.

**பெருந்தெய்வ வழிபாடு:**

தொல்காப்பியர் முல்லைக்குத் திருமால், குறிஞ்சிக்கு முருகன், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் போன்றோரை கடவுள்களாகக் கூறுகிறார். இதனை தொல்காப்பியர் தம் இலக்கண நூலான தொல்காப்பியத்தில்,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும் எனச்**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”**

**(தொல். அகத். 5)**

எனத் தெய்வங்களைப் பட்டியலிடுகிறார்.[2] இத்தெய்வ வழிபாடுகளுள் திருமால், முருகன் போன்ற பெருந்தெய்வ வழிபாடு அகநானூற்றில் இடம்பெறுகிறது. இவை தவிர்த்த சிவன் வழிபாடு குறித்தும் அகநானூறு எடுத்துரைக்கிறது.

**திருமால்:**

பெருந்தெய்வமாகக் கருதப்படும் திருமால் முல்லை நிலத்திற்குரிய கடவுள் எண்ணப்படுகிறார். இவர் வைணவ சமயம் தொடர்புடைய கடவளாகக் கருதப்படுவர். இவர் பற்றிய பத்து அவதாரங்கள் கூறப்படுகிறது. இத்தகு சிறப்படை திருமாலின் வண்ணம், உருவம், கொடி, அணிகலன், படுக்கை, அவரின் திருவவதாரச் செயல்கள் ஆகியன அகநானூற்றின் பல இடங்களில் பேசப்படுகிறது. இதனை அகநானூற்றின்,

**“வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை**

**அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்**

**மரம்செல மிதித்த மாஅல் போல...”**

**(அகநா. 59 4-6)**

என மருதனிள நாகனார் திருமாலின் சிறப்பைக் கூற விழையும் போது, ஒரு களிறானது தனது பிடியுண்ணும் பொருட்டு, யாமரக் கொம்பினைத் தாழ்த்துக் கொடுத்தது அதுபோலத் திருமாலின் அவதாரமாம் கண்ணன் ஆய்ச்சியருக்காகக் குருந்த மரத்தைத் தாழ்த்தினான் எனக் கூறுகிறார். இவண்கண் மக்களைக் காத்தற் பொருட்டு கண்ணன் அவதாரத்தில் அவன் (திருமால்) செய்த செயலால் திருமாலின் பெருமை பறைசாற்றப்படுகிறது.

**சிவன்:**

பெருந்தெய்வங்களுள் சிவபெருமான் சிறப்புடன் கருதப்படுகிறார். சிவன் சைவ சமயத்தைச் சார்ந்த கடவுள். சிவபெருமானின் உடல் சிவந்த வானம் போலும், அவனது வெண்மையான கூரிய பற்கள் வானத்திலுள்ள பிறைசந்திரன் போலும் உள்ளன. நெருப்புக்கிளைத்து எரித்தாற் போன்ற விரிந்த முறுக்குண்ட சடையுடையவன். தேவர்களும் முனிவர்களும் பிறரும் அறியவியலாத பழமை மிக்கவன். ஒளி பொருந்திய வரிப்புலியின் தோலை உடுத்தியவன். நீலகண்டன், கொன்றைமலர் மாலையன் பூணூல் அணிந்த மார்பன், பகைவரை அழிக்கும் குந்தாலிப் படையைக் கையில் அவனுக்கு மத்தலைச் சூலப்படை உண்டு. அவனது வாகனம் அனேறு ஆகும் என அகநானூறு சுட்டுகிறது. இதனை,

**“கார்விரி கொன்றை பொன்நேர் புதுமலர்த்**

**தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்**

**(அகநா.- கடவுள் வாழ்த்து 1-5)**

எனும் வரிகளின் வாயிலாக சிவவழிபாடு அக்கால மக்களிடையே நிலவியதை அறிந்து கொள்ள முடிகிறது.

**முருகன்:**

முருகன் தனது மார்பிலே அணிந்துள்ள முத்து மாலையானது செவ்வான் ஒளியிலே வரிசையாகப் பறந்து செல்லும் கொக்குகளின் கூட்டம் போலிருந்ததை நக்கீரா் குறிப்பிட்டுள்ளாா். பேராற்றல் மிக்க முருகனைப் போர்க்கடவுளாக.

**"முருகன் அன்ன சீற்றத்துக் கருந்திறல்"** எனவும்.

**"முருகு உறழ முன்பொடு பொருதுகளம் சிவப்ப**

**முருகன் நற்போர் நெடுவேள் ஆவீ "**
**(அகநா.158 - 16)**

எனவும்,

முருக வழிபாட்டில் வெறியாட்டு நிகழ்த்தல் நடைபெறுவதைக் காணமுடிகிறது. இது முருகனுக்காக வேலனால் நடைபெறும் ஆட்டமாகும். இன்று இவ்வெறியாடல் **'சாமியாடல்'** என்ற பெயரில் நிகழ்த்தப்படுகிறது. பூசை செய்யும் வேலன், வெறியாடி முருகனை வழிபடுமிடம் **'வெறியர் களம்'** என்றழைக்கப்படுகிறது. அன்று வெறியாடல் நடத்தப்பட்டது என்பதை,

**"செல்வன் பெரும்பெயர் ஏத்திவேலன்**

**வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்"**
**(அகநா.98.18-19)**

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**"வளநகர் சிலம்பப்பாடி பலிகொடுத்து**

**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்**

**முருகு ஆற்றுப்படுத்து உருகெழு நடுநாள்"**
**(அகநா. 22. 8-11)**

நல்லந்துவன் என்னும் புலவரால் பாடப்பட்ட **"திருப்பரங்குன்றம்"** என்று பரங்குன்றைப் பாராட்டும் செய்தியையும், சூரபன்மனைக் கொன்ற- வேலாயுதத்தையுடைய- முருகன் வீற்றிருக்கின்ற திருப்பரங்குன்றம்: பற்றிய பாடலும் அகநானூற்றில் காணப்படுகிறது.

**சிறுதெய்வ வழிபாடு:**

நாட்டுப்புற தெய்வங்களையே சிறுதெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும், குலதெய்வ வழிபாடும், ஊா்த்தெய்வ வழிபாடும் இதில் அடங்கும். பெருந்தெய்வங்கள் மக்களின் வழிபாட்டில் எத்தகைய சிறப்பிடம் பெற்றனவே அதே சிறப்பினை சிறுதெய்வங்களும் பெற்றன. ''**குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறக்காதே**'' எனும் வரி சிறுதெய்வ வழிபாட்டின் சிறப்பினை எடுத்தியம்புகிறது.[3]

**பாவை வழிபாடு:**

பாவை வழிபாடனது அக்காலத்திலே நிலவியதை அகநானூறு எடுத்துரைக்கிறது. மண்ணால் பாவைகளாகிய உருவங்களை செய்து பாவை வழிபாடு மேற்கொள்ளும் வழக்கம் அக்கால மக்களிடையே இருந்துள்ளது. பெண்களால் மேற்கொள்ளப்படும் இவ்வழிபாடானது அறுவடை ஒய்ந்த, மழைக்காலம் முடிந்த பின்னா் பல்வேறு இசைக்கருவிகளைக் கொண்டு இசையை எழுப்பி, காசுகள், பூக்கள் அகியவற்றைக் கொண்டு பாவையைச் சுற்றி வைத்து அம்மகளிா் அனைவரும் ஒன்றாகக் கூடி பாவைக் கூத்தை ஆடினா். இதனை, மதுரை மருதநிள நாகனாரின் பாடல்வழி காணலாம்.

**"தைஇ நின்ற தண்பெயர் கடைநாள்......**

**பொலங்காசு நிரைத்த கோடேந்து அல்குல்**

**நலங்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வரப்**

**(அகநா. 269. 14-16)**

இப்பாவை வழிபாடே பெண்களால் நோற்கப்படும் பாவை நோம்பிற்க்கு வித்திட்டது எனலாம். முன்னாளில் இவ்வழிபாடனது முக்கண்ணாக விளங்கும் சிவபெருமானிற்கு பருவபெண்களால் மேற்கொண்ட வழிபாடாக விளங்கிய போதிலும் பின்நாளில் இவ்வழிபாடனது வைணவ கடவுளாகிய திருமாலிற்கு இளம்பெண்களால் நோற்கப்படும் பாவை வழிபாடாக மலர்ந்தது. இப்பாவை வழிபாடே பெண்களால் நோற்கப்படும் பாவை நோம்பிற்கு வித்திட்டது எனலாம்.

**அணங்கு:**

அச்சம், அணங்கு, அழகு, பராசக்தி, ஆசை, கொலை, தெய்வப்பெண், தெய்வம், தேவர்க்காடும்கூத்து, நோய், பெண்மகள், பேய்மகள், ரோகம், வருத்தம், வருத்துந்தெய்வம் என்னும் பொருள்களை நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதி கூறுகின்றது.[4] அகநானூற்றில் அணங்கு பற்றிய பாடல்கள் (அகநா: 7, 20, 372) இடம் பெற்றுள்ளன.

**"மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய**

**காப்பும் பூண்டிசின் கடையும் போகலை....."**
**(அகநா. 7)**

பழமையுடை இப்பதியின் இடங்கள் தாக்கி வருத்தும் தெய்வங்களை உடையன. ஆதலால், இனி நீ நின்னையே காக்கும் காவலையும் மேற்கொள்க என்ற தாயின் கூற்றால் காவல் தெய்வங்களையும் வழிபட்ட தன்மையை அறியலாம்.

**நீர்தெய்வ வழிபாடு:**

பஞ்ச பூதங்களுள் ஒன்றாகக் கருதப்புடுவது நீர். இதனைக் கடவுளாக வழிபட்ட மாண்பு அகநானூற்றில் காணமுடிகிறது. இந்நீரின் முக்கிய இடமாக விளங்கும் கடலை தெய்வமாக எண்ணினர். இக்கடல் தெய்வத்தை வழிபடும் விதமாக மகளிர் வெறியாட்டம் நிகழ்த்தி வழிபட்டமையைக் காணப்படுகிறது. இதனைத் தலைவியின் காதல் நோய் நீங்கும்படியாக 'நீர் தெய்வத்திற்கு கள்ளையும் நீரையும் ஆட்டையும் பலியாகயிட்டும் நோய் தணியவில்லை' என்று புலம்பும் கூற்றில்,

**"கள்ளுங் கண்ணியுங் கையுறை யாக**

**நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்**

**நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட வோச்சித்...."**

**(அகநா. 156. 13-15)**

எனும் பாடல்வரிகள் இக்கருத்திற்கு வலுவூட்டுகிறது.

**கார்த்திகை தீப வழிபாடு:**

கார்த்திகையிலே, உரோகிணியும் சந்திரனும் சேரும் நடு இரவிலே மனைகள் தோறும் அலங்கரிக்கப்பட்டு, வீதிகள் தோறும் விளக்கேற்றி வைப்பார்கள். ஆங்காங்கே மலர் மாலைகளைக் கட்டித் தொங்கவிடுவார்கள். பலரும் கூடித் திருவிழாவைக் கொண்டாடுவார்கள். இதனை,

**“ உலகுதொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி**

**மழைகால் நீங்கிய மாக விசும்பில்.......**

**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**

**மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்**

**பழவிறல் மூதூர்ப் பலருடன்...”**
**( அகநா. 141 5-10)**

எனும் வரிகள் கார்த்திகைத் தீபத் திருநாளைக் கொண்டாடிய முறை குறித்துத் தெளிவாகக் கூறுகிறது. மேலும் மாலைப் பொழுதில் வபெண்கள் விளக்கேற்றி வழிபட்டமையையும், **“பெண்கள் மாலைக்காலத்திலே பிறையை வணங்குவார்கள்”** [5] இவ்வாறு இன்று நம்மால் முருகனுக்கு சிறப்பாக கொண்டாடும் இக்கார்த்திகை தீப வழிபாடானது அக்காலத்திலேயே நிலவியுள்ளதையும், இவ்வழிபாடானது பன்னெடுங்காலமாக நம்மால் கொண்டாடப்பட்டு வருவதும் நம்கண்கூடு. எனினும் அன்று தீபமாகக் கொண்டாடப்பட்ட வழிபாடானது பின்னர் தனியொரு கடவுளுக்கு கொண்டாடப்படும் இறைவழிபாடாக, விழாவாக மலர்ந்தது என்பது பின்னை வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.

**நடுகல் வழிபாடு:**

சங்ககால மக்கள் தத்தமது சூழல்களுக்கேற்பப் பல தெய்வங்களை வழிபட்டதுடன், பல்வேறு வழிபாட்டு முறைகளையும் பின்பற்றினர். அவ்வகையில் போர்க்களத்திலே மாண்ட வீரர்களுக்கு நடுகல் நாட்டி வழிபட்டனர். நடுகல்லிலே அவர்களுடைய பெயரையும் பெருமையையும் எழுதி வைப்பார்கள். ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலையில் இந்நடுகல் வழிபாட்டை,

**“அவன்பெயர்கல் மிசைப்பொறித்துக்**

**கவின்பெறக் கல்நாட்டின்று”**
**(புறப். வெண். மா – பொது. 10)**

எனக் குறிப்பிடுகிறர்[6]. இந்நடுகல் வழிபாட்டை அகநானூறு,

**“பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**

**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்**

**வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்....”**
**(அகநா.131.10-12)**

என நடுகற்கள் ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் அமைக்கப்பட்டதையும், கள், உயிர்பலி, மலர்கள் போன்றவற்றைக் கொண்டு நடுகல் வழிபாட்டினைச் செய்துள்ளனர் என்பதனையும் மேற்கண்ட பாடல்வழி அறிய முடிகிறது.

**கொற்றவை வழிபாடு:**

சங்க காலத்தில் கொற்றவை போர்த் தெய்வமாக வழிபாடு செய்யப்பட்டது. இத்தெய்வம் வெற்றியளிக்கும் தெய்வமகவும், போர்க்களத்திலே தமக்குப் படைக்கலப் பயிற்சி பெற்ற இளையோரைப் படைக்கு அறிமுகப்படுத்துகின்ற போது போர்த் தெய்வமான கொற்றவைக்கு முதலில் வழிபாடு செய்வர். புறப்பொருள் வெண்பாமாலையில் **“கொற்றவை நிலை”** எனும் துறையில் கொற்றவையின் புகழ் பேசப்படுகிறது. இது வெற்றிக்குக் காரணமாக விளங்கும் இறைவியாகிய கொற்றவையைப் புகழ்ந்து கூறுவதாக அமைகிறது. இக்கொற்றவை வழிபாட்டு விழாவினை அகநானூற்றில் பூந்தொடை விழாவாகக் கொண்டாடினர் என்பதை,

**“வார்சுழல் பொலிந்த வன்கண் மழவர்**

**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன....“**
**(அகநா.187. 7-8)**

என்று குறிப்பிடுவதால் கொற்றவை எனும் தெய்வத்தைப் போர்த் தெய்வமாக வழிபாட்டை தன்மையை உணரலாம். ஆகையினால் போருக்குப் புறப்படுவதற்கு முன்பு கொற்றவையை வணங்கிவிட்டுப் போரினைத் தொடங்கிள்ளனர் என்பதனை இதன்வழி அறிந்து கொள்ளவியல்கிறது. இத்தகைய கொற்றவை வழிபாடு இன்று சக்தி, மாரியம்மன், காளியம்மன், துர்க்கை வழிபாடாக மாறியுள்ளது.

**முடிவுரை**:

- தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பிருந்தே இறைவழிபாடு நம் மக்களிடையே நிலவியுள்ளது.
- சிவன், திருமால், முருகன் போன்ற பெருந்தெய்வங்களையும், கொற்றவை வழிபாடு, பாவை, அணங்கு போன்ற சிறு தெய்வங்களையும், நடுகல் வழிபாடு, கார்த்திகை தீப வழிபாடு, மலையுறை தெய்வ வழிபாடு போன்ற வழிபாட்டு முறையும் நிலவியதை அகநானூறு எடுத்துரைக்கிறது.
- தொல்காப்பியரால் கூறப்படாத சிவ வழிபாடு பிற்காலத்தில் வளர்ந்துள்ளதை அகநானூற்றுத் தொடர்புடைய இவ்வாய்வால் அறியமுடிகிறது.
- பாவை வழிபாடு, வேலன் வெறியாட்டு, கார்த்திகைத் தீப வழிபாடு போன்றவற்றை மகளிர் மேற்கொண்டுள்ளமையைக் காணலாகிறது.
- ஆடவர் கொற்றவை வழிபாட்டிற்கு முதன்மையளித்துள்ளனர். பின்னாளில் கொற்றவை வழிபாடு வளர்ச்சியடைந்து சக்தி, மாரியம்மன், காளியம்மன், துர்க்கை வழிபாடாக மாற்றம் பெற்றுள்ளது.

## References:

Tamilannal, Puthiya Nokkil Tamil Ilakkiaa Varalaru, 39th Edition, Meenakshi Puthga Nilayam, Madurai.

Sakthivel .S, Nattuppuraviyal Aaivu, Manivasagar Pathippagam, Chennai, India.

Chithambaranar. Samy, Eattuthogaium Tamizar Panpadum, Arivu Pathippagam, Chennai, India.

Thiruganasanbandhan. S, Purapporul Venba Maalai, Kathir Pathippagam, Thiruvaiyaru.

Agananooru Aaivukkovai, Kurunji Pathippagam, Aanboor.